

கோவை மாவட்ட அ.தி.மு.க முன்னாள் இளம் பெண்கள் பாசறை அமைப்பாளரும், மாமன்ற முன்னாள் உறுப்பினருமான சொக்கம்புதூர் செந்தில் மேற்கு மண்டல கழகப் பொறுப்பாளர் வி.செந்தில் பாலாஜி முன்னிலையில் கழகத்தில் இணைந்தார். உடன் கோவை வடக்கு மாவட்ட கழகச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி, மாநகர் மாவட்டப் பொறுப்பாளர் துரை.செந்தமிழ்ச் செல்வன், ஆர்.எஸ்.புரம் பகுதி கழகப் பொறுப்பாளர் கார்த்திக் செல்வராஜ் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

### பெரம்பலூர் - குன்னம் சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட

# பாக நிலை முகவர்கள் (பி.எல்.ஏ. 2) ஆலோசனைக் கூட்டம்!

## அமைச்சர் சா.சி. சிவசங்கர் பங்கேற்பு – மாவட்டப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் அறிக்கை!

பெரம்பலூர், நவ,1-

பெரம்பலூர் மாவட்ட தி.மு.க.சார்பில், பெரம்பலூர், குன்னம் சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட பாக நிலை முகவர்கள்(BLA2) பாக நிலை டிஜிட்டல் முகவர்கள், BDA மற்றும் IT WING பூத் ஆலோசனைக் கூட்டம் நடைபெறுகிறது. இது குறித்து பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு,



"என் வாக்குச்சாவடி, வெற்றி வாக்குச்சாவடி" எனும் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் முழக்கத்தின்படி,

2026 சட்டமன்ற தேர்தலில் "வெல்வோம் 200, படைப்போம் வரலாறு" எனும் வெற்றிப்பயணத்தை தொடரும் வகையில், நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சரும் மண்டல பொறுப்பாளருமான கே.என்.நேரு மற்றும்

கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா.எம்.பி. ஆகியோர் வழிகாட்டுதல்படி, போக்குவரத்துத் துறை மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஆலோசனைக்கிணங்க,

பெரம்பலூர் மாவட்ட தி.மு.க.சார்பில், பெரம்பலூர்,குன்னம் ஆகிய இரண்டு சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட

பாக நிலை முகவர்கள்(BLA2)

பாக நிலை டிஜிட்டல் முகவர்கள் (BDA) மற்றும் IT WING பூத்கமிட்டி ஆலோசனைக் கூட்டம், இன்று (01.11.2025), சனிக்கிழமை காலை 10.00 மணியளவில், ஜே.கே.மஹால் திருமண மண்டபத்தில், மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன்(எனது) தலைமையில் நடைபெறுகிறது.

இந்தக் கூட்டத்தில், போக்குவரத்துத்துறை மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், கே.என். அருண்நேரு எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்

எம். பிரபாகரன்,தொகுதி பார்வையாளர்கள் தங்க. சித்தார்த்தன், ஏ.கே.அருண் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

இதில் மாநில நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக் குழு உறுப்பினர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், வார்டு , கிளைக் கழக செயலாளர்கள், பாக நிலை முகவர்கள்(BLA2)

பாக நிலை டிஜிட்டல் முகவர்கள் (BDA) மற்றும் IT WING பூத் ஒருங்கிணைப்பாளர்கள் ஆகிய அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும்.

வரும்போது மாவட்ட கழகம் சார்பில் வழங்கப்பட்ட கைபேசியை எடுத்து வரவும்.

இவ்வாறு பெரம்பலூர் மாவட்டக் கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### தி.மு.க. தொண்டர் அணி

## மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்

### தி.மு.க. தொண்டர் அணிச் செயலாளர் பெ. சேகர் அறிவிப்பு

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி – மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. தொண்டர் அணியின் திருப்பூர் தெற்கு மாவட்ட அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**திருப்பூர் தெற்கு மாவட்டம்**

தலைவர் – ப. அண்ணாதுரை 60/10, குடியிருப்பு வீதி, குமரலிங்கம் அஞ்சல், மடத்துக்குளம் – 642204, திருப்பூர் மாவட்டம்.

துணைத் தலைவர் – கே. முருகன் 3/37பி, சின்ன பொம்மன் சாலை, புங்கமுத்தூர் அஞ்சல், உடுமலைப்பேட்டை – 642207, திருப்பூர் மாவட்டம்.

அமைப்பாளர் – ஆ. கருப்பையா 2/181, ஆர்.ஜி. லே-அவுட், எஸ்.வி. மில், உடுமலைப்பேட்டை, திருப்பூர் மாவட்டம் – 642128.

துணை அமைப்பாளர்கள் – 1) எம். மணிகண்டன் 4/110, குருவப்ப நாயக்கனூர், மானுப்பட்டி, உடுமலைப்பேட்டை – 642112, திருப்பூர் மாவட்டம். 2) பொன். மகுடீஸ்வரன் 4/140, முக்கூடு ஜல்லிபட்டி, தொட்டம்பட்டி அஞ்சல், உடுமலைப்பேட்டை, திருப்பூர் மாவட்டம். 3) எஸ். முருகேசன் 3/111, விளாமரத்துப்பட்டி அஞ்சல், பெரியபாப்பனூத்து ஊராட்சி, உடுமலைப்பேட்டை தாலுக்கா – 642207, திருப்பூர் மாவட்டம். 4) ஜெ.எஸ். ஹஸன் 4/80, விஜய் நகர், சின்னாம்பாளையம், பொள்ளாச்சி – 642001, திருப்பூர் மாவட்டம். 5) மா. ஆதியப்பன் 4/708, நேதாஜி நகர், சோமவாரப்பட்டி, பெதப்பம்பட்டி அஞ்சல், உடுமலைப்பேட்டை, திருப்பூர் மாவட்டம். 6) கே. பரமசிவம் 2/54, அழகப்பா குடியிருப்பு, சின்னாம்பாளையம், உடுமலை ரோடு, பொள்ளாச்சி – 642001, திருப்பூர் மாவட்டம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை – 18
நாள்: 30–10–2025.

**மாஸ்டர் பெ. சேகர்**
செயலாளர்,
தி.மு.க. தொண்டர் அணி



சென்னை பெரம்பூர் அரசு போக்குவரத்துக் கழக பணிமனையை தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்களுடன் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். இந்நிகழ்வின் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் மரு.கலாநிதி வீராசாமி,பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா, பெருநகர சென்னை மாநகராட்சியின் ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், மண்டலக் குழுத்தலைவர் சரிதா மகேஷ்குமார், மா.போ.கழகத்தின் இணை மேலாண் இயக்குனர் சுந்தரபாண்டியன் மாநகர் போக்குவரத்துக் கழக உயர் அலுவலர்கள் மற்றும் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் உடன் இருந்தனர்.

# உச்சநீதிமன்ற 53 வது தலைமை நீதிபதியாக சூர்யகாந்த் நியமனம் !

## நவம்பர் 24 அன்று பதவியேற்கிறார்!

புதுடெல்லி, நவ.1 -

உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியாக இருக்கும் பி.ஆர்.கவாய், நவ., 24 ம் தேதியுடன் ஓய்வு பெற உள்ளார். இதனையடுத்து புதிய தலைமை நீதிபதியை நியமிப்பதற்கான நடவடிக்கைகள் துவக்கப்பட்டன. அடுத்த தலைமை நீதிபதியாக சூர்யகாந்த்தை நியமிக்க பி.ஆர்.கவாய் பரிந்துரை செய்து இருந்தார்.

இந்நிலையில் மத்திய சட்டத்துறை மந்திரி அர்ஜுன் ராம் மேவால் வெளியிட்ட சமூக வலைதளப்பதிவில் கூறியுள்ளதாவது:-

இந்திய அரசியலமைப்பு வழங்கிய அதிகாரத்தின்படி, சுப்ரீம் கோர்ட்டின் அடுத்த தலைமை நீதிபதியாக சூர்யகாந்த்தை நியமித்து ஜனாதிபதி திரவுபதி முர்மு உத்தரவு பிறப்பித்துள்ளார். அவருக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து, நீதிபதி சூர்யகாந்த் யாதவ், நவம்பர் 24ம் தேதி தலைமை நீதிபதியாகப் பொறுப்பேற்பார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

★சுப்ரீம் கோர்ட்டின் மூத்த நீதிபதியான சூர்யகாந்த், கடந்த 1962ம் ஆண்டு பிப்.,10 ல் அரியானா மாநிலம் ஹிசார் நகரில் பிறந்தவர்.

★ஹிசாரில் கல்லூரியில் 1981ம் ஆண்டு பட்ட மேற்படிப்பு முடித்தார்.

★1984 ல் ரோதக் நகரில் உள்ள மஹரிஷி தயானந்த் பல்கலையில் சட்டப்படிப்பு முடித்தார்.

★ அதே ஆண்டு ஹிசார் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

★ தொடர்ந்து 1985 ல் பஞ்சாப் மற்றும் சண்டிகர் ஐகோர்ட்டில் பணி தொடர்ந்தார்.

★2000 ம் ஆண்டு அரியானாவின் அட்வகேட் ஜெனரலாக நியமிக்கப்பட்டார்.

★2004ம் ஆண்டு ஜன.,9 ல் பஞ்சாப் மற்றும் அரியானா ஐகோர்ட்டின் நிரந்தர நீதிபதியாக நியமிக்கப்பட்டார்.

★2018ல் இமாச்சல பிரதேச ஐகோர்ட் தலைமை நீதிபதியாக பணியாற்றினார். 2019 ல் சுப்ரீம் கோர்ட் நீதிபதியாக பதவி நியமனம் செய்யப்பட்டார்.

★வரும் நவ.,24ல் தலைமை நீதிபதியாக பதவியேற்கும் அவர், 2027 பிப்.,9 வரை பதவி வகிப்பார்.

### இரட்டை இன்ஜின் ஆட்சியில் மின் கட்டண உயர்வு!

# புதுச்சேரி மக்கள் வரும் தேர்தலில் பாடம் புகட்டுவர்!

## எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா எச்சரிக்கை!

புதுச்சேரி, நவ.1-

புதுச்சேரி சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவரும், மாநில திமுக அமைப்பாளருமான இரா.சிவா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-



புதுச்சேரியை ஆளும் பாஜக என்.ஆர்.காங்., என்ற அவர்களே சொல்லிக்கொள்ளும் இரட்டை இன்ஜின் அரசு புதுச்சேரி மக்கள் மீது தொடர்ந்து இரு பக்க தாக்குதலை நடத்தி வருகின்றது. தற்போது மீண்டும் மின் கட்டண உயர்வு என்ற தாக்குதலை நடத்தியுள்ளது.

பிரதமர் மோடி உத்திரவாதம் அளித்த பெஸ்ட் புதுச்சேரியை உருவாக்குவதற்கு மாறாக ஒர்ஸ்ட் புதுச்சேரியை இந்த இரட்டை இன்ஜின் அரசு உருவாக்கி வருகிறது. அதுவும் தேசப்பிதா காந்தி பிறந்த அக்டோபர் மாதத்தில் இந்த உயர்வு கட்டணம் அமலுக்கு வந்துள்ளது. அதுவும் கடந்த ஜுன் மாதம் 16ம் தேதி மின் கட்டணத்தை உயர்த்தினர். அந்த கட்டண உயர்வை சமாளித்து மீண்டு வருவதற்குள்

நான்குமாத இடைவெளியில் மீண்டும் மின் கட்டணத்தை உயர்த்தியுள்ளனர். பா.ஜ.க.விற்கு ஒருமுறை மின் கட்டணம் உயர்வு, என்.ஆர். காங்கிரசுக்கு ஒருமுறை மின் கட்டணம் உயர்வா? இந்த மின் கட்டண உயர்வுக்கு காரணம் என்ன? ஒன்றிய அரசின் நிர்பந்தமா? அல்லது வேறு என்ன என்பதை முதல்வர் ரங்கசாமி மவுனம் கலைத்து சொல்ல வேண்டும்.

ஜுன் 16ம் தேதி 100 யூனிட்வரை கட்டணம் ஒரு யூனிட்டிற்கு ரூ.2.25 ஆக இருந்தது. அதனை ரூ.2.70க்கு உயர்த்தினர். தற்போது 20 காசுகள் உயர்த்தி ரூ.2.90 ஆக அதிகரித்துள்ளனர். அதுபோல் 101 யூனிட்டிற்கு மேல் 200 யூனிட் வரை ரூ.4.00ல் இருந்து ரூ.4.20 ஆகவும், 201 யூனிட்டில் இருந்து 300 யூனிட்வரை ரூ.6.00ல் இருந்து ரூ.6.20 ஆகவும், 301 யூனிட்டில் இருந்து 400 யூனிட் வரை ரூ.7.50ல் இருந்து ரூ.7.70 ஆகவும் உயர்த்தி உள்ளனர். மேலும் 401 யூனிட்டிற்கு மேல் ரூ.7.50ல் இருந்து ரூ.7.90 ஆக 40 பைசா வரை உயர்த்தியுள்ளனர்.

மின்துறையை தனியாருக்கு கைமாறும் நிலை நோக்கி சென்று கொண்டுள்ளது. மின் துறை தனியார் மயமானால் மின் கட்டணம் தாறுமாறாக உயர்ந்துவிடுமோ என்று மக்கள் பயந்து கிடக்கும் நிலையில் இரட்டை இன்ஜின் அரசு நாங்கள் ஒன்றும் தனியாருக்கு சலைத்தவர்கள் அல்ல என்பதை இந்த கட்டண உயர்வு மூலம் நிரூபித்து வருகின்றனர். அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும்போதே அதுவும் துறையாக இருக்கும் போத மின் கட்டண உயர்வை தடுக்க முடியாத இரட்டை இன்ஜின் அரசு, எப்படி தனியார் கட்டுப்பாட்டில் சென்றால் மின் கட்டண உயர்வை தடுத்துவிடும்?

திமுக ஆட்சி காலத்தில்தான் ஒரு குடிசைக்கு ஒரு விளக்கு என்ற திட்டத்தை கொண்டுவந்து அனைத்து வீடுகளுக்கும் மின்சாரம் வழங்கி மண்ணெண்ணெய் விளக்கெல்லாம் மின் விளக்காய் மாறி மின்னியது. தற்போது சாதாரண ஏழை, எளிய, நடுத்தர குடும்பங்கள் எல்லாம் மிக்சி, கிரைண்டர், வாஷிங்மெஷின், டி.வி., ஏசி ஆகிய அனைத்து மின்சாதன வீட்டு உபயோகப் பொருட்கள் பயன்படுத்தும் நிலை உருவாகியுள்ளது. அந்த பொருட்கள் எல்லாம் மக்களின் கடும் உழைப்பால் வாங்கப்பட்டவை. அதனையெல்லாம் மாநில வளர்ச்சி என்று பீற்றிக்கொள்ளும் அரசு அந்த மக்களுக்கு அபராதம் விதிக்கும் விதத்தில் மின் கட்டணத்தை உயர்த்தி வசூலிப்பது எந்த விதத்தில் நியாயம்?

வாடகை வீடுகளில் குடியிருப்போர் வாடகைத் தொகையை விட அதிகம் மின் கட்டணம் செலுத்தும் அவலம் இன்று இந்த அரசால் ஏற்பட்டுள்ளது. மின்துறையை தனியாருக்கு தாரை வார்க்கும் பணிகளை செய்துவருவதுடன், நிதி நெருக்கடியில் உள்ள இந்த சமயத்தில் அரசின் ரூ.400 கோடியை கோடியை செலவு செய்து 'பிரீ பெய்டு' மீட்டர் அமைப்பது அவசியமா? என்று கேள்வி எழுப்பினோம். அப்போது மின்துறை அமைச்சர் கடந்த 29.08.25 அன்று ஸ்மார்ட் மீட்டர் இன்னும் வாங்கப்படவில்லை என்று தெரிவித்தார். இந்நிலையில் ஸ்ரீ மணக்குள விநாயகர் கோவிலில் பூசை போட்டு 'பிரீபெய்டு'திட்டத்தை அவசர அவசரமாகத் தொடங்கியுள்ளனர். ஆனால் அந்நிகழ்ச்சியில் ஆளுநர், முதல்வர், துறை அமைச்சர், தொகுதி அமைச்சர் ஏன் துறை செயலர்கூட இல்லை. ஏன் பங்கேற்கவில்லை என்று யாராலும் கூற முடியுமா? மக்களின் எதிர்ப்பை சம்பாதிக்க வேண்டியிருக்கும் என நினைப்பவர்கள் ஏன் அந்த திட்டத்தை கொண்டுவர பின்னால் இருந்து செயல்பட வேண்டும்? இந்நிலையில் மின் கட்டணத்தை உயர்த்தி தனியார் கொள்ளை லாபம் ஈட்ட வழி வகுப்பது நியாயமா? ஒருபுறம் பிரிபெய்டு மூலம் தாக்குதல் மற்றொருபுறம் கட்டண உயர்வு மூலம் தாக்குதல் நடத்துவதுதான் இரட்டை இன்ஜின் ஆட்சியா?

மக்கள் விரோத மின் கட்டண உயர்வை இந்த அரசு உடனே திரும்பப் பெற வேண்டும். இல்லையேல் வரும் தேர்தலில் மக்கள் சரியான பாடம் புகட்டுவார்கள். அதாவது இந்த இரட்டை இன்ஜின் அரசுக்கு பாராளுமன்ற தேர்தலில் மக்கள் ஒரு தாக்குதலை நடத்தியதைப்போல், சட்டமன்ற தேர்தலிலும் ஒரு தாக்குதலை நிச்சயம் நடத்துவார்கள் என்றும் எச்சரிக்கிறேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# விழுப்புரம் வடக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ., சிறப்புரை!

செஞ்சி, நவ.1-

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் செயற்குழு கூட்டம் செஞ்சியில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட அவைத்தலைவர் டாக்டர் சேகர் தலைமை தாங்கினார். தொகுதி பார்வையாளர்கள் செஞ்சி கார்த்திகேயன், மயிலம் இள.புகழேந்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர். செஞ்சி கிழக்கு ஒன்றிய செயலாளர்,செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் அனைவரையும் வரவேற்றார். கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் செஞ்சி மஸ்தான்எம் எல் ஏ உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் விழுப்புரம் மண்டல பொறுப்பாளரும் உழவர் நலன் மற்றும் வேளாண்மை துறை அமைச்சர் எம். ஆர். கே. பன்னீர்செல்வம் அவர்கள் காணொளி காட்சி வாயிலாக என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி குறித்தும் சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்தம் தொடர்பாக திமுக நிர்வாகிகளுக்கு பல்வேறு ஆலோசனைகளை வழங்கியதை எல்இடி திரை மூலம் திமுக நிர்வாகிகளுக்கு ஒளிபரப்பு செய்யப்பட்டது.

தொடர்ந்து கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார் அப்போது அவர் பேசுகையில் கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்றுதில் இருந்து இரவு பகல் பாராமல் ஏழை எளிய மக்களுக்கு உழைத்துக் கொண்டு வருகிறார் அந்த வகையில் விவசாயிகளுக்கும் ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார் முதலமைச்சர் திட்டங்களை இந்தியா மட்டும் இல்லை உலக நாடுகளே வரவேற்கின்றனறவ கையில் முதலமைச்சரின் திட்டங்கள்தமிழ்நாடு தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இது போன்ற திட்டங்களை ஒன்றிய அரசால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. மேலும் தற்போது ஒன்றிய அரசு இந்திய தேர்தல் ஆணையம் மூலம் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தைசெயல்படுத்த உத்தரவிடப்பட்டுள்ளது. இந்தப் பணியின் போதுதிமுக நிர்வாகிகள் கவனமுடன் வாக்காளர் பட்டியல் பெயர் சேர்த்தல் பணியை மேற்கொள்ள வேண்டும் என முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார் அந்த வகையில் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி என்ற முன்னெடுப்புடன் திமுக நிர்வாகிகள் பாக முகவர்கள் பூத் டிஜிட்டல் முகவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணியில் முழுமையாக ஈடுபட வேண்டும் எனவும் ஒவ்வொருஊராட்சியிலும் முதலமைச்சரின் சாதனைகளையும் திட்டங்களையும் எடுத்துக் கூற வேண்டும் அந்த வகையில் நாம் சரியாக உடல் உழைப்புடன் பணியாற்றினால் 100 சதவிதம்வாக்குகளில் 80 சதவீதம் வாக்குகள் திமுக கூட்டணி கட்சிக்கு உறுதியாக கிடைக்கும். தி.மு.க. நிர்வாகிகள் அனைவரும் கவனம் செலுத்தி திமுக ஆட்சியில் செய்த சாதனைகளை ஒவ்வொரு வீடாக எடுத்து சொல்லி வாக்குகள் சேகரிக்க வேண்டும், செஞ்சி மயிலம் திண்டிவனம் ஆகிய மூன்று தொகுதிகளிலும் அதிக வாக்குகள் வித்தியாசத்தில்மாபெரும் வெற்றி பெறுவதற்கு அனைவரும் கடுமையாக உழைக்க வேண்டும்.

75 ஆண்டுபவள விழா கண்ட திமுக 1000 ஆண்டு காலத்திற்கு யாராலும் தொட்டுப் பார்க்க முடியாதஅளவிற்கு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வருவதாக முன்னாள் அமைச்சர் மாவட்ட கழக செயலாளர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ பெருமிதம்தெரிவித்தார்.

கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேதுநாதன்,செந்தமிழ் செல்வன், தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா, மாவட்ட துணை செயலாளர்கள் ரவிக்குமார், அருணகிரி, அமுதா ரவிக்குமார், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் நெடுஞ்செழியன், சீனி ராஜ், மாநில பொதுக் குழு உறுப்பினர்கள் கதிரேசன், மணிவண்ணன், வீடு ரவி,சாந்தி ஏழுமலை, ,ஒன்றிய கழக செயலாளர் சொக்கலிங்கம், அண்ணாதுரை, ராஜா ராமன்,தயாளன், பழனி, ரவிச்சந்திரன், மணி மாறன், செழியன், துரை, இளம்வழுதி, பச்சையப்பன், விஜயராகவன், சாந்தி சுப்பிரமணியன், திண்டிவனம் நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன்,செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான்,அனந்தபுரம் நகர செயலாளர் சம்பத், அனந்தபுரம் பேரூராட்சி மன்ற தலைவர் முருகன்,மாவட்ட அணி அமைப்பாளர்கள், அஞ்சாஞ்சேரிகணேசன்,பிரசன்னா, திலகவதி,ராஜசக்தி, திருமலை, கே. அண்ணாதுரை ,கே. எஸ். செந்தில்குமார், தமிழரசன்,ரோமியன், மாவட்ட கவுன்சிலர்கள் அரங்க ஏழுமலை, உள்ளிட்ட மாநில,மாவட்ட, ஒன்றிய, நகர ,பேரூர் கழக நிர்வாகிகள், ஊராட்சி கழக நிர்வாகிகள்,அணி நிர்வாகிகள், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர் செஞ்சி நகர செயலாளர் கார்த்திக் நன்றி கூறினார்.